DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.204/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | அண்ணாமலை | கிராமம் : | |
| தந்தை பெயர் : | கணேசன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026

1, 2 எதிரிகள் ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது சேலத்தில் குடியிருந்து வருகிறேன். சிந்தலவாடி மணல்குவாரியில் உதவி பொறியாளராக பணிபுரிந்து கடந்த 14.07.2017 அன்று பணியில் இருந்தபோது மாலை சுமார் 04.10 மணிக்கு சிந்தலவாடி மணல் குவாரியில் டாரஸ் லாரிகளுக்கு எல்லாம் டோக்கன் கொடுத்து உள்ளே அனுப்பினோம். மணல் ஏற்றி வந்த லாரிகளுக்கு நாங்கள் பெர்மிட் கொடுத்து கொண்டிருந்தோம். TN–34–E–3025 என்ற பதிவெண் கொண்டிருந்த டாரஸ் லாரியை சோதனை செய்த போது சந்தேகம் ஏற்பட்டது. வண்டியில் ஆர்.சி. புக் வாங்கி பார்த்தேன். ஆர்.சி.புக்கில் இருந்த எண்.TN–59–AE–9813 என்று இருந்தது.

2. வண்டிக்கு நெம்பர் பிளேட் போலியாக ஒட்டப்பட்டிருந்தது தெரிய வந்தது. இது சம்பந்தமாக காவல் துறையில் வண்டி ஆஜர் செய்து புகார் கொடுத்தேன். அதே நேரத்தில் மற்றொரு டாரஸ் வண்டி பதிவெண்ணான Tn–47–X–5679 என்று இருந்ததை பார்த்தபோது மணல் ஏற்றாமல் இருந்தது. வண்டியை உள்ளே அனுப்புவதற்கு முன்பு பார்த்தபோது டோக்கனில் கையெழுத்து தப்பாக இருந்தது. அந்த வண்டியை போலிசில் புகார் கொடுத்து ஒப்படைத்தேன். என்னிடம்

காட்டப்படும் புகார் என்னுடையது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இரு லாரியையும் ஓட்டி வந்த டிரைவர்களை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். ஒருவர் பெயர் முனியப்பன், இன்னொருவர் பெயர் குமார் ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. சம்பவம் நடக்கும் போது எங்கு இருந்தேன் என்றால் சிந்தலவாடி மணல் குவாரியில் பணியில் இருந்தேன். இந்த தவறு நடந்தது எப்போதும் தெரியும் என்றால் ஒவ்வொரு வண்டியிலும் சோதனை செய்தபோது தான் தெரியும். லாரி மணல் குவாரிக்குள் செல்லும் போது சோதனை செய்வோமா என்றால் சோதனை செய்வோம். நாங்கள் செல்லும்போது சோதனை செய்திருந்தால் முனியப்பன் ஓட்டிச் சென்ற லாரியை பிடித்திருக்கலாம் சரியாக இருந்ததால் தான் முதலில் பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. டோக்கனில் உள்ள எண்ணும், வண்டி எண்ணும் சரியாக இருந்தது. லாலாபேட்டையில் மணல் குவாரி இருந்ததா என்றால் இல்லை இரண்டும் ஒன்று தான். லாலாபேட்டையில் உள்ளதை தான் சிந்தலவாடி என்று சொல்வார்கள். மணல் ஏற்றி வரும்போது தணிக்கை செய்வோம் என்றால் சரிதான்.

2. சம்பவத்தை பற்றி என்னிடம் சொன்னது யார் என்றால் நான் தான் சோதனை செய்தேன். நான் பணியிலிருந்த போது என்னுடன் அரசு ஊழியர்கள் எத்தனை பேர் பணியில் இருந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் வேலை செய்தேன். எனது புகாரில் சிந்தலவாடியில் நடக்கும் மணல் குவாரியில் நான் மட்டும் தான் அரசு பணியில் இருந்தேன் என்று சொல்லியிருக்கிறீர்கள் என்றால் ஞாயபகம் இல்லை. என்னை தவிர வேறு யாரும் பணியில் இருந்தார்களா என்றால் ஞாயபகம் இல்லை. அன்றைய தேதியில் மணல் எடுக்க செல்லும்போது மணல் லாரிகளுக்கு அரசியல் தலையீடு இருந்ததா என்றால் இல்லை. அரசியல் தலையீடு இருந்ததால் தான் முனியப்பன் ஓட்டி வந்த லாரியை தணிக்கை செய்து நான் அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல.

3. அன்றைய தினம் என்னுடைய மேல் அதிகாரி வந்ததால் வண்டியை பிடித்து வண்டி எண் தவறாக இருக்கிறது என்று வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நானும், அரசியல் வாதிகளும் சேர்ந்து தான் டோக்கன் கொடுக்காமலேயே லாரியை உள்ளே அனுப்பி வைத்தேன் என்றால் தவறு. மேல்

அதிகாரிகள் வந்து தான் என் மீதும் குற்றம் சாட்டப்படும் என்று நான் வழக்கில் மாட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக அந்த எண்ணை நானே எழுதி தவறுதலாக வண்டியில் ஒட்டி வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. லாரியின் முன் பின் மஞ்சள் கலர் நெம்பர் பிளேட்டை யார் ஒட்டியது என்று நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நானே ஒட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் உடந்தையாக இருந்ததால் தான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்களை சரிபார்த்து அனுப்புவது தான் என் வேலை. யார் ஒட்டியது என்று விசாரிக்கவில்லை. அந்த டாரஸ் எத்தனை யூனிட் மணல் ஏற்றி வந்தது என்றால் 3 யூனிட் மணல் ஏற்றி வந்தது. மணலை என்ன செய்தேன் என்றால் காவல் நிலையத்தில் வண்டியுடன் மணலையும் ஒப்படைத்தேன். நான் பிடித்தபோது எத்தனையாவது வரிசையில் வண்டியை பிடித்தேன் என்றால் ஞாயபகம் இல்லை. அன்றைய தினம் 10 ஊழியர்கள் பார்த்தார்கள் அதை மறைப்பதற்காக நான் மட்டும் பார்த்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. முனியப்பன் வண்டியை ஆற்றிலிருந்து எடுத்திட்டு வரும் போது பிடிக்கவில்லை என்றாலும், லாலாபேட்டையில் நின்று கொண்டிருந்தபோது முனியப்பனை வண்டியுடன் கூட்டி வந்து பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 11:17:07 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**